**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 398 /2019 PW . 1**

**பெயர் : மதுவரன்** **தந்தை/கணவர் பெயர்: ராமநாதன்**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2025

---

**(1வது எதிரி ஆஜர். 2வது எதிரி இறப்பு. 3வது எதிரி ஆஜரில்லை. 3வது எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**07.08.2025 முதல் விசாரணை தொடர்ச்சி:**

1. அரசு தரப்பில் சம்பவத்தின் போது எடுக்கப்பட்ட வீடியோ ஆதாரம் மற்றும் புகைப்பட ஆதாரங்கள் அடங்கிய பென்டிரைவ் குறியீடு செய்ய மனு செய்து அம்மனு சிஆர்எல்.எம்.பி. எண். 8/2025 அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பென்டிரைவ்-உடன் தாக்கல் செய்யப்பட்ட 65பி சான்றிதழ் முழுமையானதாக காணப்படவில்லை. எனவே மேற்கண்ட பென்டிரைவ் குறியீடுசெய்யப்படவில்லை. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை புகார் கொடுத்தன்று விசாரித்தார்கள். பென்டிரைவ் சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து அதனை என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

2. சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது அப்பா மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் குறித்து எனக்கு எனது அப்பா போனில் தகவல்சொன்னார். எனது அப்பாவை உடனடியாக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கும்படி நான் சொன்னேன். புகார் கொடுக்கப்பட்டது. ஆனால் போலீசார் வாங்க மறுத்துவிட்டனர். புகார் கொடுத்ததை வாங்க மறுத்துவிட்டதை முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் அரசு தரப்பு வழக்கறிஞர் கேள்வி கேட்கவில்லை அதனால்சொல்லவில்லை. குற்ற சம்பவம் நடந்திருந்தால் உடனடியாக காவல்நிலையத்தில் புகார்கொடுக்கவேண்டும் என்பது தெரியுமா என்றால் தெரியும். எனது தாய் தந்தையர் காவல்நிலையம்சென்றார்கள். ஆனால் புகார் வாங்கப்படவில்லை. மேற்படி விபரத்தை எனது முதல்விசாரணையில் சொல்லவில்லை என்றால் அரசு தரப்பு வழக்கறிஞர் கேள்வி கேட்கவில்லை அதனால்சொல்லவில்லை. புகாரை காவல்நிலையத்தில் யாரிடம் எனது பெற்றோர்கள் புகார்கொடுத்தார்கள் என்றால் ஆய்வாளர் கவிதாவிடம்கொடுத்தார்கள். நான் மருத்துவர் என்பதால் குற்றவியல் நடைமுறை தெரியுமா என்றால் குறைந்தபட்ச அளவு தெரியும்.

3. குற்றசம்பவம் குறித்து புகாரானது காவல்நிலையத்தில் ஏற்கப்படவில்லை என்றால் ஆன்லைனில் கம்பளைன்ட் கொடுக்கலாம் என்ற விபரம்தெரியும். நான் பதிவு தபாலில் புகார் மற்றும் நேரில் காவல் கண்காணிப்பாளரை சந்தித்து புகார் கொடுத்துள்ளேன். மேற்படி விபரத்தை முதல்விசாரணையில் சொல்லவில்லை என்றால் அரசு தரப்பு வழக்கறிஞர் கேள்வி கேட்கவில்லை அதனால்சொல்லவில்லை. எனது பெற்றோரை 28ம் தேதி பார்த்தேன். ஆனால் புகாரில் 29ம் தேதி என்றுசொல்லியுள்ளேன் என்றால் 29ம் தேதியும் பார்த்தேன். 29ம் தேதி காலை நேரத்தில் சென்று

பார்த்தேன். நேரம்ஞாபகமில்லை. அதன் பிறகு எஸ்வி.மங்கலம் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன் என்றால் நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. காவல் கண்காணிப்பாளரிடம் காலை 10-11 மணியளவில் புகார்கொடுத்தேன். மதியம் காவல் துணை கண்காணிப்பாளரை சந்தித்து புகார் கொடுத்தேன். மதியம் 3-4 மணியளவில் எஸ்வி.மங்கலம் காவல்நிலையத்திற்கு சென்றேன். மேற்படி புகார் காவல்கண்காணிப்பாளரிடம் இருந்து துணை கண்காணிப்பாளர் மூலம் காவல்நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. காவல்கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாரின் நகலை எஸ்வி.மங்கலம் காவல்நிலையத்திற்கு சென்று கொடுத்தேனா என்றால் இல்லை. காவல்துணைகண்காணிப்பாளர் மேற்படி என்னுடைய புகாரை சீல் இட்டு என்னிடம் கொடுத்து காவல்நிலையத்தில்கொடுக்க சொன்னார். நான் கொடுத்த புகாரை மீண்டும் ஆய்வாளர் கவிதா பெற்றுக்கொள்ளவில்லை. நான் கொடுத்த புகாரின்அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றால் தனிநபர்புகாரோ அல்லது புகாரை பதிவு செய்ய நீதிமன்ற உத்தரவு பெற நீதிமன்றத்தை அணுகலாம் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். 29ம் தேதி முதஅறிக்கை பதிவுசெய்ததால் நான் நீதிமன்றத்தை அணுகவில்லை.

4. பதிவு தபால் புகார் கொடுத்த பின்னர் மேற்படி புகார் சம்பவத்திற்கு விரோதமாக போலீசார் எழுதிக்கொடுக்க சொன்னதை எழுதி புகார் கொடுத்தேன் என்றால்சரிதான்.

**(சாட்சியின் குறுக்குவிசாரணையானது அரசு தரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் பதிவு செய்யவேண்டியிருப்பதால் கு.வி. ஒத்திவைக்கப்படுகிறது).**